மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அந்த பாலத்திற்கான ஒப்புதல் போர்டு-ஆஃப் டைரக்ட்டர்ஸ்ஸுக்கு வந்திருக்கிறது. அது எவ்வளவு விரைவாக கட்டி முடிக்கப்படுமோ அவ்வளவு விரைவாகக் கட்டி முடிக்கப்படும்.

சாம்பார் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம்.

* 4451 திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் ஆலமரத்துப்பட்டியில் சாம்பார் பள்ளம் நீர்த்தேக்கத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சாம்பார்பள்ளம் குறுக்கே குட்டை அமைக்கும் திட்டம் குறித்து தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் ரூ.7.90 இலட்சத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தற்பொழுது மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

9-50 மணி

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சேலம் மாவட்டத்தில் கொளத்தூர் பஞ்சாயத்தில் இருக்கும்படியான இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டுவதன் மூலம் அப்பகுதியில் இருக்கும் விவசாயிகளுடைய நிலங்கள் மிகவும் சாகுபடிக்கு அதிகமாகப் பயன்படுகின்ற நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றிட அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல, அந்தப் பகுதியிலே புஞ்சை நிலம், இந்த நீர்த்தேக்கம் கட்டுவதால் 58.27 ஏக்கர் பயனடையக்கூடும் என்பதை இன்வெஸ்டிகேஷன் சீஃப் இன்ஜினியர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ 7.90 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அது குறித்து சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது. அவர்களுடைய பரிந்துரை வந்த பிறகு அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மேட்டூர் வட்டத்தில் கொளத்தூர் பகுதியில் இருக்கும்படியான அந்த சாம்பார்பள்ளம் மேற்குத் தொடர்ச்சி மலையில் இரண்டும் இணைக்கப்பட்டு இருக்கும்படியான அந்த மலைப்பகுதி

1990 ஏப்ரல் 18]

குறைந்த மழை பெய்தாலும், அந்தத் தண்ணீர் முழுவதும் அந்தப் பள்ளத்தின் வழியாக வருவது, அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. இப்படித் தேக்குவதன் மூலம் விவசாயிகளுடைய பண்ணைகள் அபிவிருத்தி செய்வதற்கும், ஊற்றுக்கள் அதிகரிப்பதற்கும் வசதி ஏற்படும். அத்தகைய திட்டத்திற்கும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். வரவேற்கிறேன். விரைவில் நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : சம்பார் வழிந்தோடாமல், சிலர் இட்லியால் தேக்குவதைப் போல, அந்தத் தண்ணீர் வழிந்தோடாமல் அந்த நீர்த்தேக்கம் கட்டப்படும் என்ற உறுதியை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல்

** 6743 டாக்டர் எம். மோசஸ் :*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தண்ணீர் தேக்கம் மற்றும் வழங்கல் தொடர்பாக எல்லா மாவட்டங்களிலும் வேளாண்மை, குடிநீர், வடிகால், மண்ணியல், பொதுப்பணி முதலிய துறைகளில் அலுவலர்களையும், விவசாயிகள் பிரதிநிதிகளையும் சேர்ந்த குழு அமைத்து சீரான முறைகளைப் பின்பற்ற திட்டங்கள் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இல்லை.

சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள்.

** 2066 திரு. செங்கை சிவம் மற்றும்*

திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சத்துணவுக் கூடங்களில் பணி புரிபவர்கள் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களா?

(ஆ) இல்லையெனில், தகுதியின் அடிப்படையில் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலெட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் பணிபுரிபவர்கள் அரசால் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில்தான் நியமிக்கப்படுகிறார்கள்.